# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western Inida Mission

*செய்தி மலர்* ஏப்ரல் 2022


கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

நம்மை இரட்சிக்க மரித்து உயிர்த்தெழுந்த, இன்றும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களை தேவ பெலத்தோடு கடந்துவர கிருபை செய்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். கடந்த நாட்களில் கொரோனா நோயின் தாக்கங்களுக்கு நம்மை விடுவித்து பாதுகாத்த தேவாதி தேவனுக்கே சகல துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக. இந்த நோயின் தாக்கங்கள் முற்றிலும் அழிந்து போகவும், எவ்விதத்திலும் மீண்டும் ஜனங்களை தாக்காதிருக்கவும் தொடர்ந்து ஜெபியுங்கள். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வெகு சீக்கிரத்தில் குணமடையவும் அவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் உண்டாகவும் ஜெபத்தோடு நம் துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

உலகையே அதிர வைக்கும் ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கிற போர் சீக்கிரத்தில் முடிவுக்குவர ஜெபியுங்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் இரத்தத்தைச் சிந்தி, இன்னுயிரை இழந்து, இரத்தமயமாக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டிற்காக ஜெபியுங்கள். இரண்டு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும் தேவன் தாமே சமாதானத்தின் ஆவியையும், தங்கள் நாட்டு இராணுவ வீரர்கள் மற்றும் அப்பாவி மக்கள் வீணாக இரத்தம் சிந்தி மரிக்கும் சூழ்நிலையைக் கண்டு அம்மக்கள் மீது கரிசனை கொண்டு தங்கள் எண்ணங்களை, நோக்கங்களை மாற்றும் தூய ஆவியானவரின் அருள்மாரியைப் பெரும்படியும் தேவபிள்ளைகளாகிய நாம் அவர்களுக்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். ”கடைசி நாட்களில் யுத்தங்களையும் யுத்தத்தின் செய்திகளையும் கேட்பீர்கள்” என்ற வேத வாக்கியத்தை நினைவு கூறவும், நாம் நம்மை ஆயத்தமாக்கிக் கொள்ளவும் அழைக்கப்படுகிறோம்.

நம் இந்திய நாட்டிலுள்ள குஜராத் மாநிலம், வரும் கல்வியாண்டிலிருந்து, பகவத்கீதையையும் அனைத்து கல்வி நிலையங்களிலும் கற்பிக்கப்போவதாக அறிவித்துள்ளது. இன்னும் சில நாட்களில் மேலும் பல மாநிலங்கள் இத்தகைய அறிவுப்புகளை வெளியிட வாய்ப்புகள் உள்ளது. இந்தியா என்பது மதச்சார்பற்ற நாடாகும். ஒரு மனிதன் தான் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமையுள்ள நாடாகும். ஆனால் இத்தகைய மதசார்பு


பூர்கி பணித்தள விசுவாசிகளுடன் நமது ஊழியர்கள்

கொள்கையை வேரறுக்கும் நிலை இந்நாட்களில் ஏற்பட்டுள்ளது. உலகில் உள்ள பலநாடுகளில், மதத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் நாடுகளில் கூட இல்லாத அளவிற்கு, மதத்தை பள்ளிகளில் கட்டாயமாக்கும் நிலை நமது நாட்டில் மட்டுமே ஏற்பட்டுள்ளது. எப்படியாகிலும், அந்த நிலைமை மாற ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். இல்லையெனில், மூடபழக்கவழக்கங்களையும், வேண்டாம் என்று விட்டுவந்தவைகளையும் மீண்டும் கற்கும் சூழ்நிலைக்கு நம் பிள்ளைகளை விற்றுவிட வேண்டிய கொடிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். பிள்ளைகள் கல்வி கற்க வேண்டிய வயதில், விரும்பத்தகாத நிகழ்வுகளில் தங்கள் கவனத்தை திருப்ப வேண்டியது வரும். இல்லாவிட்டால், கல்விஅறிவற்ற சூழ்நிலையில் வளரும் நிலையில் பிள்ளைகளின் எதிர்காலம் அமையும். தேவ ஜனங்களாகிய நாம், நம்மிடையே உள்ள சிற்சில கருத்து வேறுபாடுகளை தள்ளி வைத்து விட்டு, ஒன்றிணைந்து ஜெபிக்க வேண்டிய நேரம் இது. நாம் அவருடைய நாமத்தில் ஒன்றிணையும்போது தேவன் செயல்படுவார். இத்தகைய சூழ்நிலைகளை உருவாக்க நினைப்பவர்களே அதை வேண்டாம் என்று சொல்லும் சூழலைக் கொடுப்பார். எலியா என்பவனைப் போல் நாம் கருத்தாய் ஜெபித்தால் முடிவு நிச்சயம் ஒரு ஆசீர்வாதமான அனுபவமே!

நம்முடைய மிஷனெரிகள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபியுங்கள். நமது ஊழியங்களை தங்களுடைய உதாரத்துவமான காணிக்கையினால் தாங்கிவரும் தேவபிள்ளைகள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் தேவனுடைய ஆசீர்வாதம் அளவில்லாமல் உண்டாக ஜெபிப்போம். கர்த்தர் நம் அனைவரையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக! ஆமென்! அல்லேலூயா!

## தாப்பி தீவுக்குள் சுவிசேஷம்

பல கிராமங்களை அகற்றி விட்டு உக்காய் அணைகட்டப்பட்டது. கிராம மக்கள் அருகிலுள்ள கிராமங்களில் புகுந்து கொண்டனர். இருப்பினும் ஒரு சிலர் தங்களின் கச்சா வீடுகளில், அங்கேயே தங்கி மீன் பிடித்து வாழ்ந்து வருகின்றனர். மின்சாரமோ, வலை தள இணைப்புகளோ, சாலைகளோ ஏதுமில்லாமல், சராசரி கிராம வாழ்வைவிட்டு பல கி.மீ தூரம் சென்று தனியாக வாழ்கின்றனர். அவர்களை சந்திக்க நமது விசுவாசிகளுடன் இணைந்து நடந்தோம். வழியில் சந்தித்த மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தோம். பெண்களாகக் கூடி வந்தோம். ஆட்டிடையர்களைக் கண்டோம், நல்ல மேய்ப்பன் இயேசுவை அறிமுகம் செய்தோம். படகில் ஏறி திட்டுப் போன்ற தீவில் குட்டி மீன்களை காய வைத்துக் கொண்டிருந்த அன்பானவர்களை சந்தித்தோம், சுவிசேஷம் அறிவித்தோம், அவர்களோடு இணைந்து ஜெபம் செய்தோம், அம்மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்பட, வாழ்வாதாரம் உயர, அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.



தாப்பி தீவு மக்களுடன் நமது ஊழியர்கள்

## செய்தி : திறக்கப்பட்ட போதும்.......தெளிந்த போதும் !

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கவே பிறந்து, நமது பாவத்திற்காகவே மரித்து, நமக்கு பாவத்திலிருந்து முழுமையான விடுதலை தரவே உயிர்த்த இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் உன்னதங்களிலுள்ள சகல ஆசீர்வாதங்களினாலும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

லெந்து நாட்களில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் நாம், தேவன் கிருபையாய் தந்திருக்கும் ஆலய அனைத்து ஆராதனைகளையும் பயன்படுத்திக் கொள்வோம். பக்தனோடு இணைந்து

"இன்னும் கிட்ட, கிட்ட சேர்த்துக் கொள்ளுமேன் பாடுபட்ட நாயகா; இன்னும் கிட்ட, கிட்ட சேர்த்துக் கொள்ளுமேன்; ஜீவன் தந்த இரட்சகா". என மனதை கல்வாரி நாயகனிடம் பறிகொடுத்து, அவரோடு, அவருக்காக வாழும் வாழ்க்கை வாழ்வோம்.

இம்மாதத்தின் லெந்து கால பயணத்தில் கண்கள் திறக்கப்பட்ட போது மற்றும் புத்தி தெளிந்த போது, ஏற்பட்ட சில மாறுதல்களைக் கற்றுக்கொண்டு, வேதம் தரும் வெளிச்சத்தில் நம்மை சீர்தூக்கிப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

### 1. கண்கள் திறக்கப்பட்ட போது ஆதாம் : ஆதி 3 : 6 - 10

வாழ்வின் பாதையில், தேவனோடு இணைந்து குடும்பமாய் நடந்து வந்த வழியில் ஏதோவொரு குறுக்கீடு நடக்கிறது.

கள்ளச் சாத்தான், தந்திரமுள்ள பிசாசு நய வஞ்சக வார்த்தைகளைப் பேசுகிறான். ஏதோ ஒரு சிறப்பு இவர்களின் கண்களுக்கு மறைக்கப்பட்டு இருப்பதாகவும், இறைவனின் கட்டளையை உடைத்து, அதற்கு விரோதமாய்ச் சென்றால், செய்தால் மட்டுமே அச்சிறப்பு அவர்களை வந்தடைவதாகவும் ஏமாற்றுகிறான். மயங்கும், மயக்கும் வார்த்தைகள் எண்ணெய் போல் வழுவி, ஏவாளின் காதில் மட்டுமல்ல; வாழ்விலே விதையாய் விழுகிறது, இந்த விதை உடனே முளைக்கிறது, ஆம்! கண்டாள், வேகமாக வளர்கிறது, ஆம்! பறித்தாள், புசித்தாள், கொடுத்தாள், உடனடியாக கனியும் தருகிறது, ஆம்! இருவரின் கண்களும் திறக்கப்பட்டன. தங்களிடம் வஸ்திரம் இல்லை என்னும் உணர்வு வந்தது. இன்ஸ்டன்ட் தீர்வு புலப்படுகிறது, அத்தியிலைகளைத்தைத்து, ஆடைகளை உண்டாக்கினார்கள். இவை யாவும் படைத்தவைரை மறைக்குமோ? அனுதினம் சந்திக்கும் ஆண்டவர் இன்றும் வந்தார், அழைத்தார். அவருடன் நடந்த தம்பதி இன்று இல்லை.

பிரியமானவர்களே, அழகானதும், அருமையானதும், பயனுள்ளதுமென்று நாம் நினைத்தோமோ, அல்லது சாத்தான் நம் காதுகளில் ஓதியதை நம்பினோமோ? தெரியாது.





ஞானஸ்நானம் பெற்றவர்கள் மற்றும் காரஞ்சா விசுவாசிகள்

ஆனால் அதை பின்பற்றினதினால் பாழாய்ப்போயிருக்கிறோம். லெந்து காலங்களில் உணர்வடைகிறோம். கண்கள் திறக்கப்படுகிறது. நாம் செய்வது என்ன? கிளைகளாலும், இலைகளாலும் மூடப்பட்ட குழிக்குள் கிடந்து முழிக்கும் யானைக்குட்டியா நாம்? ஆதாமின் கண்கள் திறக்கப்பட்டன. ஒளிந்து கொள்ள இடம் தேடினான்.

## 2. புத்தி தெளிந்த போது இளைய மகன்: லூக் 15 : 13 - 20

தகப்பன், மகன் மிக சந்தோஷமான குடும்பம். இளையவனாதலால் கொஞ்சம் செல்லம் அதிகமிருந்திருக்கலாம். இங்கும் ஏதோவொரு குறுக்கீடு நடக்கிறது. பிஞ்சு பழுக்கிறது. எனக்கு நானே; என் பங்கு எனக்கே; பிளவு பெரிதாகிவிட்டது. தனக்கானதை ஒன்று சேர்த்தான், தூரம் புறப்பட்டான், துன்மார்க்கமாய் வாழ்ந்தான், சொத்தை அழித்தான். எல்லாம் இழந்தான். பஞ்சத்தில் பஞ்சாகிப் போனான். வெறுங்கை பிசைந்து நின்றான். கூலியும் இல்லை; வேலையும் இல்லை. தேடினான், ஓடினான், பன்றிகளின் பின்னால். பன்றிகளுக்குக் கிடைத்தது கூட, இளையவனுக்குக் கிடைக்கவில்லை. ஒருவேளை கிடைத்திருந்தால் புத்தி இன்னும் மங்கிபோயிருக்குமோ? புத்தித் தெளிகிறது. தன்னை நொந்து கொள்ளவே இல்லை. கடந்தகாலத் தவறை நினைத்து குற்றமனச்சாட்சி கொண்டானில்லை. வெட்கமும், அவமானமும், எதிர்கால அச்சமும் தடையாயில்லை, தெளிந்த புத்தியோடு, செய்ய வேண்டிய காரியமும், அதைச் செய்ய வேண்டிய முறையும் புலப்படுகிறது. ஒளிந்து கொள்ள மனமில்லை; ஓடிச் செல்ல மனம் வந்தது. மறைந்து, மறுதலிக்க விருப்பமில்லை; மாறாக, மனமார, அறிக்கை பண்ண விருப்பம் வந்துவிட்டது. பிரியமானவர்களே, நாமும் எத்தனை முறை தூரம் போய்விட்டோம், "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" இதுதான் வாழ்க்கை முறையா? லெந்து காலங்களில், தியானிக்கிறோம். சுயத்தை அறிகிறோம் சென்றுவிட்ட தூரத்தை அளக்கிறோம் நினைவலைகளில். விளைவு என்ன? இளையவனின் புத்தித் தெளிந்தது. போகும் பாதையை, செய்ய வேண்டிய காரியத்தை, செய்யும் முறையைக் கண்டடைந்தான்.

## 3. கண்கள் திறக்கப்பட்ட போது இருவர்: லூக்: 24 : 13 - 35

மிக ஆனந்தமான, அற்புதமான ஒரு குழு. கூடவே இருந்தால் மட்டும் போதும், உணவு குறையாது. 5 போதும், 5,000 பேர் சாப்பிட்டு மீதியுமிருக்கும், பணம் வேண்டுமா?



மாடியா மொழியில் வேதாகமத்தைப் பெற்ற சந்தோஷத்தில் விசுவாசிகள்

மீன் வாயைத் திறந்தால் போதும். இங்கேயும் ஒரு குறுக்கீடு, குழுவின் தலைவர் சுக போக வாழ்வுக்காக அல்ல; முழு மனுக்குலத்தையும் மீட்டு இரட்சிக்க, தன்னையே தாரை வார்க்கவந்தவர். மனிதர் விரும்பும் அரசு அல்ல; விண்ணுலக அரசு அமைக்க வந்தவர். பிடிபட்டார் துரோகிகளால், அறையப்பட்டார் அதிகாரிகளினால், அடிபட்டார் நியாயப் பிரமாணத்தை அறிந்தவர்களால், அடக்கம் பண்ணப்பட்டார் அன்பானவர்களால். தேடி வந்த பெண்களுக்கு தரிசனம் தந்தார் மூன்றாம்நாளில். இவ்விருவர்களால் நம்ப முடியவில்லை. இயேசுவுக்கு, தன் சீடரின் துக்கமுகம் காண பிடிக்கவில்லை. தாமே வருகிறார், உடன் இணைகிறார், விசாரிக்கிறார், காது கொடுத்து கேட்கிறார், விளக்கமும் கொடுக்கிறார், தவறைக் கண்டிக்கிறார், இன்னமும் புரியாத சீஷர்களிடம் பிரிந்து போவது போல காண்பிக்கிறார். வருந்தி அழைத்தவர்களுடன் சென்று, புரிய வைக்கவே, அப்பத்தைபிட்கிறார், கண்கள் திறக்கப்பட்டு விட்டன. மலைத்துநிற்க மறுத்து, உற்சாகமாய் அந்நேரமே எழுந்து, திரும்பிச் சென்று, கூடியிருந்த பதினொருவருக்கும் இயேசுவின் உயிர்த்தெழுதலை விவரித்துச் சொன்னார்கள்.

இன்று கூட நீங்களும் கடந்த கால துக்கத்தில் மூழ்கி வாழ்ந்து கொண்டு இருக்கலாம், இயேசு எங்கும் போகவில்லை, உயிர்த்தெழுந்த வல்லமையோடு உங்களுடன் தான் இருக்கிறார், உங்களுடன் கூட நடக்கிறார், உங்களை விசாரிக்கிறார், உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். பிரியமானவர்களே, இன்னும் சில நாட்களில் இயேசுவின் உயிர்த்தெழுதலை கொண்டாட இருக்கிறோம். அவர் இல்லாத கல்லறையில் அவரைத் தேடாமல், நம்மோடு இருக்கும் இயேசுவை அறிவோம். திறக்கப்பட்டக் கண்களோடு, என்றும் ஜீவிக்கும் இயேசுவை பிறருக்கு அறிவிப்போம்.

மிகவும் அன்பானவர்களே, கண்கள் திறக்கப்பட்ட ஆதாமைப் போல ஓடி ஒளிகிறோமா? புத்தித் தெளிந்த இளையவனைப்போல ஓடிச் சென்று இயேசுவோடு இணைகிறோமா? கண்கள் திறக்கப்பட்ட இரு சீடர்கள் போல, அறியாதோர்க்கு அறிவிகிறோமா? இயேசு உயிர்த்தெழுந்த திரு நாளில், அறியாதோர்க்கு அறிவிக்க, அறிவிப்போருக்கு ஆதரவும் தர முன் வருவோமா? கர்த்தர் நிறைவான நன்மைகளினால் உங்களை நிறைப்பாராக, ஆமென்.

## சாட்சி

**கடந்த மாத இதழில், ரித்திக் எனும் 10 வயது சிறுவனின் பெற்றோர் இணைந்து வாழ ஜெபிக்கக் கேட்டிருந்தோம், நம் தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். பல மாதங்களாகப் பிரிந்திருந்த ரித்திக்-கின் தந்தை போய் அம்மாவை அழைத்து வர தேவன் கிருபைச் செய்தார். என்னே ஆச்சர்யம்! குடும்பமாக சந்தோஷமாக இணைந்து வாழ்கிறார்கள். அல்லேலூயா!**

வீட்டுக் கூடுகை பிம்பிரி



## சாட்சி

பூர்கி பணித்தளத்தைச் சேர்ந்த பிர்சு உசேண்டி (35 வயது) என்பவரது மகன் அமித் (3-வயது) நீங்காத வயிற்று வலியால் மிகவும் அவதிப்பட்டு வந்தான். அவனுடைய வயிறு வீக்கமாக இருந்தது மற்றும் விலா எலும்புப் பகுதியிலும் வலியால் சிரமப்பட்டு வந்தான். இவனது தந்தை பிர்சு சிறுவனை பூஜாரியிடம் அழைத்துச் சென்று சுகம் கிடைக்க அனைத்து காரியங்களைச் செய்தும் பலனில்லை. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும் சுகம் கிடைக்கவில்லை. வலியால் அவதிப்பட்டு வந்த சிறுவன் சாப்பிடாமல் நாளுக்கு நாள் மிகவும் பலவீனம் அடைந்துக் கொண்டே இருந்தான். இந்நிலையில் பிர்சு தனது மகன் அமித்தை விசுவாசி ஒருவர் வீட்டிற்கு அழைத்துவந்தார். அங்கு சென்ற நமது ஊழியர் சகோ. விஜயக்குமார் அவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறி சிறுவனுக்காக ஜெபித்தனர்.

பிர்சுவும் அவரது மனைவியும் அன்று இரவு பூர்கியில் உள்ள நமது ஆலய ஆராதனையில் குடும்பமாக கலந்துகொண்டு மகனுக்காக வேண்டுதல் செய்தனர். நமது விசுவாசிகள் மற்றும் ஊழியரின் ஜெபத்தின் விளைவாக தேவன் மனமிறங்கி அமித்துக்கு ஓரிரு நாட்களில் அற்புத சுகத்தை அருளிச் செய்தார். தற்போது வயிறு வீக்கம் வற்றி பரிபூரண சுகம் பெற்று, நன்றாக சாப்பிடவும் ஆரம்பித்திருக்கிறான்.

கர்த்தரின் கிருபையால் இந்த குடும்பத்தினர் மிகவும் சந்தோஷத்துடன் ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்கிறார்கள், தேவன் தனது மகனுக்கு செய்த அற்புதத்ததை "என் மகன் இப்போது நன்றாக விளையாடுகிறான் சாப்பிடுகிறான்" என்று பிர்சு சந்தோஷமாக சபைக்கு முன்பாகச் சாட்சி பகிர்ந்து கொண்டார். சிறுவன் அமித் இன்னும் பெலன்பெற்று பூரண சுகமடைய ஜெபியுங்கள். பிர்சுவின் தந்தை பூர்கியில் ஒரு பூஜாரியாக இருந்தவர். தேவன் ஒரு பூஜாரியின் முழுக் குடும்பத்தை தம்மண்டை இழுத்து கொண்டது இந்த கிராமத்தில் பெரிய சாட்சியாக மாறியுள்ளது.

## ஜெபவிண்ணப்பங்கள்

- பூர்கி ஆலயத்தில் வியாழக்கிழமை மாலைதோறும் பெண்களுக்கான கூடுகை நடைபெறுகிறது. 15 முதல் 20 பெண்கள் வரை இதில் கலந்துகொள்கின்றனர். பங்கு பெறுகிற பெண்கள் விசுவாசத்தில் பலப்படவும் முழுக் குடும்பமாக ஆலய ஆராதனைகளில் கலந்துக்கொள்ளவும் ஜெபியுங்கள். பங்கு பெறுகின்ற பெண்கள் மூலமாக பூர்கியில் ஒரு ஆத்தும அறுவடையை தேவன் கட்டளையிடவும் சுவிசேஷத்திற்கு ஒரு திறந்த வாசலை தேவன் தரவும் ஜெபியுங்கள்.



ஆர்வமுடன் வசனத்தைக் கேட்கும் தாப்பி தீவு மக்கள்

# ஜெபவிண்ணப்பங்கள்

❊ நமது பிம்பிரி பணித்தளத்தில் உள்ள அநேக வாலிபர்கள் குடி மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர். அதினால் அவர்களுடைய குடும்பங்களில் சமாதனம் இல்லாத சூழல் காணப்படுகின்றது. குடும்ப சூழ்நிலை மாறவும், வாலிபர்கள் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.

❊ இந்த லெந்து நாட்களில் பிம்பிரி பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசிகள் பலர் மிகுந்த விசுவாசத்தோடு உபவாசித்து வருகின்றனர். தேவன் அவர்களின் விசுவாசத்தைக் கனம் பண்ணவும், அவர்கள் விசுவாசத்தில் வளர எற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தி தரவும் ஜெபியுங்கள். இவர்கள் மூலமாக யோத்மால் மாவட்டம் தேவனை அறிகிற மாவட்டமாக மாற ஜெபியுங்கள். விசுவாசத்துடன் உபவாசித்து வருகின்ற நமது விசுவாசிகளின் ஜெப விண்ணப்பங்களையும் இருதயத்தின் வேண்டுதல்களையும் தேவன் அருளிச் செய்ய ஜெபியுங்கள்.

❊ பிம்பிரி பணித்தளத்தில் காரஞ்சா பகுதியில் கோபால் என்ற சகோதரர் கடந்த ஒரு மாதகாலமாக வயிற்று பிரச்சனை காரணமாக மிகவும் அவதிப்பட்டு வருகிறார். மருத்துவமனைக்குப் போனாலும் பலன் இல்லை. நமது விசுவாசிகளும் ஊழியரும் இணைந்து இவருக்காக ஜெபித்து வருகின்றனர். இவர்களின் ஜெபத்தை தேவன் கேட்டு நல்ல சுகத்தை கொடுக்க ஜெபியுங்கள்

❊ நாக்பூரில் வசிக்கும் பர்த்தம் (26) என்ற சகோதரர் கடந்த இரண்டு வருடங்களாக வங்கி வேலைக்காக முயற்சி செய்து வருகிறார், தேவன் அவருக்கு ஏற்ற நேரத்திலே நல்ல வேலை கிடைக்கப் பண்ண ஜெபியுங்கள்.

❊ பிம்பிரி பணித்தளத்தில் கரேடா என்ற பகுதியில் உள்ள நாராயணன் என்பவர் காலில் நரம்பு வலியால் நீண்ட நாட்களாக மிகவும் வேதனையில் உள்ளார். அநேக மருத்துவர்களை சந்தித்தும் குணமாகவில்லை. தேவன் அவருக்கு பரிபூரண சுகத்தைக் கொடுக்கவும், அதன் மூலமாக அந்த பகுதியில் ஒரு எழுப்புதல் ஏற்படவும் ஜெபியுங்கள்.

❊ பிம்பிரி பணித்தளத்தில் காரஞ்சா பகுதியில் ஜோதி என்பவர் கடந்த இரண்டு மாதங்களாக வயிறு மற்றும் கல்லீரல் பிரச்சனையால் மிகவும் கஷ்டபட்டு வருகிறார். இதனால் சரியாக நடக்க முடியாமலும் சிரமப்படுகிறார். தேவன் இவருக்கு அற்புத சுகம் தர ஜெபியுங்கள்.

❊ பிம்பிரி பணித்தளத்தில பரட்பாவ்னி என்ற கிராமத்தில் வசிக்கும் பூணம் (25) என்ற சகோதரியின் திருமண காரியங்களை தேவன் வாய்க்கப் பண்ண ஜெபியுங்கள். வருகின்ற நாட்களில் குடும்பமாக ஆராதனையில் இவர் பங்கு பெறவும் ஜெபியுங்கள்.



புதிய வேதாகமத்தை பெற்று கொண்ட வியாரா விசுவாசிகள்

# ஜெபவிண்ணப்பங்கள்

- குஜராத் மாநிலத்தில் காஞ்சர், டோக்கர்வா, இஷ்கண்டி மற்றும் காக்ஷாலா கிராமங்களில் சுவிசேஷத்தை நமது ஊழியர் சகோ. ஜெபசீலன் மற்றும் சக சுதேச ஊழியர்கள் அநேகருக்கு அறிவித்து வருகிறார்கள். புதிதாக அந்த கிராமங்களில் அநேகர் தேவனை ஏற்று கொள்ளவும், ஞானஸ்நானம் பெறவும் ஜெபியுங்கள். கூடி வருகின்ற மக்கள் தேவனை ஆராதிக்க அந்தந்த கிராமங்களில் விரைவில் தேவஆலயங்கள் கட்டப்படவும் ஜெபியுங்கள். அதற்கான பங்காளர்களை தேவன் எழுப்பித் தரவும் ஜெபியுங்கள்.
- வியாரா பணித்தளத்தில் இவ்வருட கோடை விடுமுறை நாட்களில் சிறுவர்களுக்கான VBS நடத்த திட்டமிட்டுள்ளோம். அதற்கான ஆயத்தங்களில் ஜெபத்துடன் ஈடுபட்டு வருகிறோம். தேவன் அனைத்து இடங்களிலும் திரளான சிறுவர்களை கூட்டிச் சேர்க்கவும், பங்கு பெறுகிற சிறுவர்கள் அனைவரும் ஆண்டவரை சொந்த இரட்சகரான ஏற்றுக் கொள்ளவும், அதற்கான தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ஏப்ரல் 13 அன்று நமது வியாரா பணித்தளத்தில் பெண்களுக்கான சிறப்பு முகாம் ஒன்றை காஞ்சர் கிராமத்தில் ஒழுங்கு செய்யதிருக்கின்றோம். அன்று இரவு ஒரு சிறப்பு இரவுக்கூடுகையும் நடத்த திட்டமிட்டிருக்கின்றோம். 30-க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து பெண்கள் கூட இருக்கிறார்கள். கூடுகையின் ஆசீர்வாதத்திற்காகவும், அதனை முன்னின்று நடத்தவிருக்கிற நமது ஊழியர்களுக்கு தேவன் நல்ல வழி காட்டுதலைத் தரவும் ஜெபியுங்கள்.
- பூர்கியில் கட்டப்பட்டு வருகிற ஊழியர் குடியிருப்பு விரைந்து கட்டி முடிக்கப்படவும் அதற்கான தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற மாத்திலே அதை பிரதிஷ்டை பண்ண தீர்மானித்து செயல்பட்டு வருகின்றோம். தேவன் அந்த முயற்சிகளை வாய்க்கப் பண்ண ஜெபியுங்கள்.

அன்பரின் பணியில்,

**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்.**

இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் இங்கு குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.

**CANARA BANK, VANNARPETTAI BRANCH, TIRUNELVELI**

**A/C NAME : WESTERN INDIA MISSION**

**A/CNO : 2952101007959**

**IFSCCODE : CNRB0002952**

(பணம் அனுப்பபட்ட விபரத்தை 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி: Dr. ஜெயக்குமார் 9894075795 சகோ. தங்கராஜ் 9944306154 சகோ. செல்வக்குமார் 9994040186 சகோ. ஃபெலிக்ஸ் 9600992654 சகோ. கோயில்பிள்ளை 9159827209

இணையதள முகவரி : https://westernindiamission.com

*Our Address:*

Western India Mission, C-98, East Rahmath Nagar, Tirunelveli 627 011.

வெஸ்டன் இந்தியா மிஷன், சி-98 கிழக்கு ரஹ்மத் நகர் திருநெல்வேலி 627 011.